**MCOP No.4871/2022 DATE:18.10.2024**

ம.சா.1

பெயா். அருண்ராஜ்

த/பெ.திரு. ராமமூா்த்தி

வயது. 29

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 17 தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2ம் எதிா்மனுதாரா் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இருசக்கர வாகனத்தில் சென்ற போது லாாி பின்பக்கமாக வந்து மோதிவிட்டது. அந்த சாலை சுமாா் 100 அடி அகலம் இருக்கும். அந்த சாலையில் வாகனங்கள் போவதற்கும், வருவதற்கும் வசதி உள்ளது. என்னுடைய இருசக்கர வாகனத்திற்கு வலது முன்பக்கத்தில் கைப்பிடியும் சேதமும் ஏற்பட்டுள்ளது. நான் தான் லாாியின் பின்பகுதியில் மோதினேன் என்றும் அதனால் தான் என்னுடைய இருசக்கர வாகனத்தின் முன்பகுதியில் சேதம் உள்ளது என்றும் சொன்னால் சாியல்ல. ஆரம்ப சுகாதார மருத்துவமனைக்கு சென்று முதல்உதவி சிகிச்சை பெற்றதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எனக்கு இரண்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு கம்பிகள் பொருத்தப்பட்டிருந்தது. அவை தற்போது நீக்கப்பட்டுள்ளது. என்னுடைய வேலை புதிதாக ஆட்களை வேலைக்கு சோ்ப்பதும் அவா்களுக்கு ஊதியம் வழங்குவது பற்றி மேற்பாா்வை செய்வதும் ஆகும். ஒரு மாதத்தில் எத்தனை நபா்கள் சோ்க்கவேண்டும் என்று இலக்கு நிா்ணயிக்கப்பட்டிருக்கிறது. விபத்திற்கு முன்பு ஆட்கள் சோ்த்தது போல விபத்திற்கு பிறகு சோ்க்க இயலவில்லை. 02.06.2023 அன்று ESI மூலமாக ரூ35,945 பெற்றுள்ளேன். 08.07.2023 அன்று ESI மூலமாக ரூ87,061 பெற்றுள்ளேன். நான் ஏற்கனவே ESI மூலமாக விபத்து காயங்களுக்கு பணம் பெற்றுவிட்டேன் என்றும், அதனால் இந்த மனு நிலைக்கதக்கதல்ல என்றால் சாியல்ல. என்னுடைய கவனக்குறைவால் விபத்து நடந்தது என்றும், அதனால் எனக்கு இழப்பீடு கிடைக்கதக்கதல்ல என்றால் சாியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோாியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சாியல்ல. அதனால் 2ம் எதிா்மனுதாரா் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவா் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.